

A/L 2009


பாட அலகு 1

# கருத்தரங்கு

## பொருளியல் அறிமுகம்




Economics

S. வரதராஜன் B.A (Hons)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல் அறிமுகம்

01

(அ) ஒரு பொருளாதாரத்தில் காணப்படுகின்ற வளங்களின் ஒரு பகுதி பயன்படுத்தப் படாதநிலையில் அப் பொருளாதாரத்தில் வளங்கள் அருமையாகவுள்ளன என்ற முடிவிற்கு வரமுடியுமா? விளக்குக.

(ஆ) 'ஒரு பொருளை நுகர்பவர் விலை செலுத்தவேண்டும் என்பது பொருளாதாரப் பொருளொன்றிற்கு இருக்கவேண்டிய ஒரு பண்பாகும்' ஏற்பீரா விளக்குக.

(இ) பொருளாதாரமில்லாப் பொருட்களுக்கு எல்லையற்ற நிரம்பல் காணப்படுகின்றது. இதனை ஏற்றுக்கொள்வீரா விளக்குக.

(அ) - இல்லை. வளங்களின் அருமைத்தன்மை என்பது வளங்களின் கிடைப்பனவை சமூகத்தின் தேவைகளோடு ஒப்பிட்டுக் கூறப்படுவதாகும்.

- வளங்களின் ஒரு பகுதி உற்பத்தியில் பயன்படுத்தப்படாமைக்கு அப் பொருளாதாரத்தில் வளங்கள் தேவைக்கும் அதிகமாகவுள்ளன என்பது காரணமாக அமையாது. போதிய தொழில்நுட்பமின்மை, போதிய முதலீடு இன்மை போன்ற காரணங்களால் வளங்களின் ஒரு பகுதி உற்பத்தியில் பயன்படுத்தப்படாம லிருக்கலாம்.

- வரையற்ற சமூகத்தின் தேவைகளோடு ஒப்பிடுமிடத்து வரையறுக்கப்பட்டதாகக் காணப்படும் வளங்கள் பற்றாக்குறையாகக் காணப்படும்போது வளங்கள் அருமைத் தன்மையுடையவையாகும்.

(ஆ) - இல்லை. பொருளாதாரப் பொருளொன்றை விலை செலுத்தாமலும் ஒருவர் நுகரமுடியும்.

- அரசாங்கம் அல்லது ஒரு நிறுவனம் சமூகநலன் கருதி பொருளாதாரப் பொருளொன்றின் செலவினை - விலையினைத் தாமே தாங்கிக்கொண்டு நுகர்பவருக்கு இலவசமாக வழங்கமுடியும்.

- ஒரு பொருள் சாதனச்செலவு, அமையச்செலவு என்பவற்றைக் கொண்டிருக்குமாயின் அதனைப் பொருளாதாரப் பொருள் எனலாம்.

(இ) - இல்லை. சூரிய ஒளி, காற்று, மழைநீர் என்பன பொருளாதாரமில்லாப் பொருட்களாகும். ஆனால் இவற்றின் நிரம்பலுக்கு வரையறையுண்டு.

- சூரிய ஒளி பகலில் மட்டும் பெறப்படும்.

- அறைக்குள் காற்று வருவதற்கு யன்னல் அமைத்தல் வேண்டும்.

- மழை பெய்யும்போது மட்டுமே மழைநீரைப் பெறமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவசமான / பொருளாதாரப் பொருள்
கணப்பயன்பாடு

**02**

**பின்வருவன இலவசப் பொருட்களா? விளக்குக.**

**(அ) விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் நீர்ப்பாசன நீர்.**

**(ஆ) வயலுக்கு கிடைக்கும் மழைநீர்**

**(இ) நீர்**

**(ஈ) பொதுப் பொருள்**

(அ) **விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் நீர்ப்பாசன நீர்.**

- இல்லை. இதற்கு வளப்பயன்பாடு உண்டு. சாதனச் செலவு காணப்படுகின்றது. எனினும் விவசாயிகளின் நன்மை கருதி இச்செலவினை அரசாங்கம் தானே தாங்கிக்கொண்டு இலவசமாக வழங்குகின்றது. மேலும் இதற்கு அமையச் செலவுண்டு. எனவே இது ஒரு பொருளாதாரப் பொருளாகும்.

(ஆ) **வயலுக்கு கிடைக்கும் மழைநீர்**

- ஆம். இதற்கு வளப்பயன்பாடு இல்லை. சாதனச் செலவு இல்லை. மேலும் இதற்கு அமையச் செலவும் இல்லை. எனவே இது ஒரு இலவசப் பொருளாகும்

(இ) **நீர்**

- நீர் சில சந்தர்ப்பங்களில் இலவசப் பொருளாகவும், சில சந்தர்ப்பங்களில் பொருளாதாரப் பொருளாகவும் காணப்படுகின்றது.
- சாதனங்களைப் பயன்படுத்தி அதாவது குளாய்கள் அல்லது கிணறுகளை அமைப்பதன்மூலம் நீர் பெறப்படுமேயானால் அதற்கு சாதனச்செலவு உண்டு. அமையச்செலவும் காணப்படும்.இந்நிலையில் நீர் பொருளாதாரப் பொருளாகும்
- சாதனப் பயன்பாடின்றி இந்நீர் பெறப்படுமேயானால் இதற்கு சாதனச் செலவு இல்லை. அமையச்செலவும் இல்லை. இந்நிலையில் நீர் இலவசப் பொருளாகும்

(ஈ) **பொதுப் பொருள்**

- இல்லை. இதற்கு வளப்பயன்பாடு உண்டு. சாதனச் செலவு காணப்படுகின்றது.
- எனினும் இவற்றின் நுகர்விலிருந்து எவரையும் விலக்கமுடியாததாகையால் இவற்றை நுகர்பவர்களுக்கு விலையினை விதிக்கமுடியாது.
- எனவேதான் விலை செலுத்தாமல் நுகர்வோர் இவற்றைப் பெறுகின்றனர்.
- மேலும் இதற்கு அமையச் செலவுண்டு. எனவே இது ஒரு பொருளாதாரப் பொருளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**03**

**(அ) அமையச் செலவு பூச்சியமாக இருக்கும் சந்தர்ப்பங்கள் யாவை?**

**(ஆ) ஒரு விவசாயி தனது நிலத்தில், குடும்ப உழைப்பினைப் பயன்படுத்தி நெல் உற்பத்தியை மேற்கொண்ட விவசாயி, கொள்வனவு செய்த உள்ளீடுகளின் செலவுகளைக் கழித்து, 10000 ரூபாவினை வருமானமாகப் பெற்றார். இவ் வருமானத்தை இலாபம் எனக் கருது வீரா? விளக்குக.**

**(இ) 'ஒரு உற்பத்தியாளன் பூச்சிய இலாபத்தினை (சாதாரண இலாபம்) பெறுகின்றான் எனக்கொள்க. இந்நிலையில் அவன் பெற்ற வருமானம் அவனது உற்பத்திக்கான பணச் செலவினை மட்டுமே உள்ளடக்கியிருக்கும். அமையச் செலவினை உள்ளடக்கியிராது' ஏற்பீரா? விளக்குக.**

(அ) - மனிதத்தேவைகளோடு ஒப்பிடுமிடத்து அருமையின்றி ஏராளமாகக் கிடைக்கும் பொருட்கள் - பொருளாதாரமில்லாப் பொருட்கள்

- மாற்றுபயோகத்தினைக் கொண்டிராத - ஒரேயொரு உபயோகத்தினை மட்டும் உடைய பொருட்கள்

- பொருளாதாரத்தில் வேலையின்மை நிலவுதல்-உற்பத்தியில் ஈடுபடுத்தப்படாத வளங்கள்.

(ஆ) - இல்லை. இது கணக்கியல் இலாபமாகும். வருமானத்திலிருந்து உற்பத்திக் கான பணச்செலவுகளை மட்டும் கழித்து பெறப்பட்டதே 10000 ரூபாவாகும்.

- பொருளியலில் இலாபம் என்பது வருமானத்திலிருந்து உற்பத்திக்கான பணச் செலவுகளை மட்டுமன்றி அமையச் செலவுகளையும் கழித்துப் பெறப்படும் தொகையாகும்.

- சொந்த நிலத்திற்கான வாடகை, குடும்ப உழைப்புக்கான கூலி என்பன இவ் உற்பத்திக்கான அமையச் செலவாகும்.

- இவ் அமையச் செலவுகளை 10000 ரூபாவிலிருந்து கழித்துப் பெறப்படும் தொகையே பொருளியலில் இலாபம் எனப்படும்.

(இ) ------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்பத்தி இயல்தகவு வளையி

**01**

(அ) 'சர்வதேச வர்த்தகத்தின் மூலம் ஒரு பொருளாதாரம் தனது நுகர்வினை அதிகரிக்க முடியும்'. உற்பத்தி இயல்தகவு வளையியைப் பயன்படுத்தி விளக்குக.


(ஆ) கலப்பு சந்தர்ப்பச் செலவுகளை விளக்குவதற்கு உற்பத்தி இயல்தகவு வளையியை எவ்வாறு பயன்படுத்தமுடியும்.

(இ) 1997 – 2007 காலப்பகுதியில் ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவு 100 சதவீதத்தினால் அதிகரித்தது. இந்நிலைமையை விளக்குவதற்கு உற்பத்தி இயல்தகவு வளையியை எவ்வாறு பயன்படுத்தலாம்.

(ஈ) ஒரு நாடு தனது பொருளாதார வளர்ச்சிவீதத்தினை உயர்த்தும் போதும் ஏற்படும் அமையச் செலவினை உற்பத்தி இயல்தகவு வளையியில் காட்டுக.


(அ) இறக்குமதிமூலம் இது சாத்தியமாகும். ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் தனது இயலளவிலும்பார்க்க கூடுதலான பொருட் சேர்க்கையினை நுகரமுடியும்.

வரைபடத்தின்படி Y பொருளில் AB என்ற அளவினை ஏற்றுமதி செய்வதன் மூலம் BD என்ற அளவினை இறக்குமதி செய்யலாம்.




(ஆ) உற்பத்தி இயல்தகவு வளையி மூலம் மூன்று வகையான அமையச் செலவுகளைக் காட்ட முடியும்


1.




**அதிகரிக்கும் அமையச் செலவு**

வரைபடத்தின் A புள்ளியிலிருந்து B புள்ளிவரையில் அமையச் செலவு அதிகரித்தபின், B புள்ளியிலிருந்து C புள்ளி வரையில் மாறாதிருக்கின்றது.

2.





**குறையும் அமையச் செலவு**

வரைபடத்தின் A புள்ளியிலிருந்து B புள்ளிவரையில் அமையச் செலவு அதிகரித்துச் சென்று, அதன்பின் B புள்ளியிலிருந்து C புள்ளிவரையில் குறைந்து செல்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.





~~மாறா அமையச் செலவு~~

வரைபடத்தின் A புள்ளியிலிருந்து B புள்ளிவரையில் அமையச் செலவு குறைந்து சென்று, அதன் பின் B புள்ளியிலிருந்து C புள்ளி வரை அதிகரித்துச் செல்கின்றது.

- குறிப்பிட்டதோர் உற்பத்தி இயல்தகவு வளையில் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட அமையச்செலவுகள் காணப்படுமாயின் அதனைக் கலப்புச் சந்தர்ப்பச் செலவு எனலாம்

(ஆ) - உற்பத்தி இயல்தகவுவளையி எல்லாப் புள்ளிகளிலிருந்தும் 100 சதவீதத்தால் வலது பக்கம் நகரும்.




- X பொருளின் உற்பத்தி இயலளவு 200 அலகுகளிலிருந்து 400 அலகுகளாக 100 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

$$\frac{200}{200} \text{ X } 100 = 100\%$$


- Y பொருளின் உற்பத்தி இயலளவு 400 அலகுகளிலிருந்து 800 அலகுகளாக 100 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

$$\frac{400}{400} \text{ X } 100 = 100\%$$

- வளங்களின் நிரம்பல் அதிகரித்தல்,உற்பத்தித்திறன் அதிகரித்தல் போன்றவற்றினால் இது ஏற்படும்.

(ஈ) [illegible]

[illegible]




[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**02**

**(அ) அருமைத்தன்மை என்றால் என்ன? இதனைக் காட்டுவதற்கு உற்பத்தி இயல்தகவு வளையியை எவ்வாறு பயன்படுத்தலாம்?**

**(ஆ) அமையச் செலவு என்றால் என்ன? இதனைக் காட்டுவதற்கு உற்பத்தி இயல்தகவு வளையியை எவ்வாறு பயன்படுத்தலாம்?**


**(இ) அபிவிருத்தியடைந்துவரும் நாடு ஒன்று அபிவிருத்தியடைந்த நாடாக மாறும் நிலையை ஒரு உற்பத்தி இயல்தகவு வளையி மூலம் விளக்குக?**

(அ) - வளங்களின் அருமைத்தன்மை என்பது வளங்களின் கிடைப்பனவை சமூகத்தின் தேவைகளோடு ஒப்பிட்டுக் கூறப்படுவதாகும். வரையற்ற சமூகத்தின் தேவைகளோடு ஒப்பிடுமிடத்து வரையறுக்கப்பட்டதாகக் காணப்படும் வளங்கள் பற்றாக்குறையாகக் காணப்படும் போது வளங்கள் அருமைத்தன்மை உடையவையாகும்.





- வரைபடத்தின்படி ஒரு பொருளாதாரம் தனது வளங்களை முழுமையாகவும் திறமையாகவும் பயன்படுத்தி ஒன்றில் X பொருளில் 100 அலகுகளை அல்லது X பொருளில் 200 அலகு களை உற்பத்தி செய்யமுடியும்.
- இவ்வாறு ஒரு பொருளாதாரம் மேற்கொள்ளக்கூடிய உற்பத்திகளுக்கு ஓர் எல்லை காணப்படுவதற்கும், இவ்வாறு காணப்படும் எல்லைக்கு அப்பால் (Aபுள்ளி) உற்பத்தியை மேற்கொள்ள முடியாமைக்கும் வளங்களின் அருமைத் தன்மையே காரணமாகும்.

(ஆ) - அருமையானதும் மாற்றுப்பயன்பாடுகளை உடையதுமான வளங்களை ஒரு குறித்த நேரத்தில் ஒரு குறித்த உற்பத்திக்குப் பயன்படுத்தும் போது இழக்கப்படுகின்ற ஏனைய உபயோகங்களில் உயர்ந்தபட்ச மாற்றுபயோக இழப்பே அமையச் செலவாகும்.




- வரைபடத்தின்படி ஒரு பொருளாதாரம் தனது வளங்களை முழுமையாகவும் திறமையாகவும் பயன்படுத்தி ஒன்றில் X பொருளில் 100 அலகுகளை அல்லது Y பொருளில் 200 அலகுகளை உற்பத்தி செய்யமுடியும்.
- இந் நிலையில் இப் பொருளாதாரம் X பொருளில் 100 அலகுகளை உற்பத்தி செய்யுமாயின் அதற்காக Y பொருளில் இழக்கப்படுகின்ற 200 அலகுகளே X பொருளின் அமையச் செலவாகும்.

(இ) - அபிவிருத்தியடைந்துவரும் கட்டத்தில் ஒரு நாடு தனது வளங்களில் பெரும் பகுதியை அத்தியாவசியப் பொருளுற்பத்திக்கு ஒதுக்கும்.
- இந்நிலையை A புள்ளி காட்டுகின்றது.
- இந்நாடு அபிவிருத்தியடைந்து செல்லும்போது ஆடம்பரப் பொருட்கள் அத்தியாவசியப் பொருட்கள் ஆகிய இரண்டையும் முன்னரிலும் பார்க்க கூடுதலாக உற்பத்தி செய்யும்.




- B புள்ளி இத்தகைய பொருளாதார வளர்ச்சி நிலையைக்காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**03**


(அ) குறிப்பிட்டதோர் உற்பத்தி நடத்தையில் அமையச் செலவு நிலையானதாகக் காணப்படு கின்றது. இந் நிலைமையை ஒரு உற்பத்தி இயல்தகவுவளையி மூலம் விளக்குக.

(ஆ) உற்பத்தி இயல்தகவு வளையியின் இவ்வடிவத்தினை நடைமுறைச் சாத்தியமற்றதாக் கும் காரணிகள் யாவை?

(இ) உற்பத்திப்புள்ளிக்கு குழிந்த வடிவத்தில் அமையும் உற்பத்தி இயல்தகவு வளையி எதனைக் காட்டுகின்றது? இது ஏன் யதார்த்தமானது என்று கூறப்படுகின்றது?

(அ) - மாறா அமையச் செலவைக் காட்டும் உற்பத்தி இயல்தகவு வளையி நேர்கோடாக அமைந்திருக் கும்.

- இவ்உற்பத்தி இயல்தகவு வளையியில் மேலிரு ந்து கீழ் நோக்கிச் செல்லும் போது கிடையச்சில் காட்டப்படும் பொருளில் பெறப்படும் ஒவ்வொரு அலகிற்காகவும் நிலைக்குத்தச்சில் காட்டப்படும் பொருளில் இழக்கப்படும் தொகை எல்லா இடத் திலும் ஒரேயளவாக இருக்கும்.




- வரைபடத்தின்படி ஒரு அலகு Xஇற்கான அமை யச் செலவைக்காட்டும் DY/DX என்ற விகிதம் உற்பத்தி இயல்தகவு வளையியின் சரிவைக் குறிக்கும். நேர்கோட்டு உற்பத்தி இயல்தகவு வளையியில் அதன் சரிவு நிலையானது ஆகையால் அமையச் செலவு நிலையானது.


AE/EB = BF/FC = CG /GD

(ஆ) - உற்பத்தி நடத்தையில் மாறா அமையச் செலவு காணப்படவேண்டுமாயின் வளங்கள் ஓரினத்தன்மை வாய்ந்தவையாக இருத்தல் வேண்டும். மேலும் உற்பத்தி நடத்தையில் மாறா எல்லை விளைதிறன் காணப்படுதல் வேண்டும்.

- ஆனால் வளங்கள் ஒத்ததன்மையுடையவையல்ல. எனவே ஒரு உற்பத்தி யிலிருந்து மற்றுமொரு உற்பத்திக்கு வளங்களை மாற்றும்போது அவை பொருந்தாமல் போகலாம்.

(இ) - உற்பத்திப்புள்ளிக்குக் குழிவாக அமையும் உற்பத்தி இயல்தகவு வளையி அதிகரித்துச் செல்லும் அமையச்செலவைக் காட்டுகின்றது.

- இவ் உற்பத்தி இயல்தகவுவளையியில் மேலிரு ந்து கீழ் நோக்கிச்செல்லும் போது கிடையச்சில் காட்டப்படும் பொருளில் பெறப்படும் ஒவ்வொரு அலகிற்காகவும் நிலைக்குத்தச்சில் காட்டப்படும் பொருளில் இழக்கப்படும் தொகை தொடர்ந்து அதிகரித்துச் செல்லும்.வரைபடத்தின்படி ஒரு அலகு X இற்கான அமையச்செலவைக் காட்டும் DY/DX என்ற விகிதம் உற்பத்தி இயல்தகவு வளையியில் மேலிருந்து கீழ் நோக்கிச் செல்லும் போது தொடர்ந்து அதி கரித்துச் செல்லும்.




AE/EB < BF/FC < CG/GD



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


- வளங்கள் ஓரினத்தன்மை வாய்ந்தவையல்ல. இங்கு குறையும் அளவுத் திட்ட விளைவு, குறையும் எல்லை விளைதிறன், அளவுத்திட்டச் சிக்கனமின்மை என்பன காணப்படுகின்றன. ஒரு உற்பத்தியிலிருந்து மற்றுமொரு உற்பத்திக்கு வளங்களை மாற்றும் போது குறிப்பிட்ட பொருளின் உற்பத்தி வீழ்ச்சியடையும். எனவே அதிகரிக்கும் அமையச் செலவே நடைமுறைக்குப் பொருத்தமானது. எனவேதான் அதிகரித்துச் செல்லும் அமையச் செலவு யதார்த்தமான ஒரு எடுகோளாகக் கருதப்படுகின்றது.

**04**

X,Y ஆகிய இரண்டு தொழில்கள் மட்டுமேயுள்ள ஒரு எளிமையான பொருளாதாரத்தைக் கருத்திற் கொள்க. இப் பொருளாதாரம் தனது உற்பத்தி இயல்தகவு வளையியில் உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றது எனவும் கொள்க. பின்வரும் நிலைமைகளை உற்பத்தி இயல்தகவு வளையியில் விளக்கப்படமுறையாக எவ்வாறு காட்டுவீர் ?

(அ) உள்நாட்டு யுத்தம் காரணமாக நாட்டின் ஊழியப்படையின் ஒரு பகுதியினர் இறத்தல். அதேநேரத்தில் பொருளாதாரத்தில் வேலையின்மை ஏற்படுகின்றது.


(ஆ) Y தொழிலில் வெளிநாட்டு முதலீடுகள் வந்து சேருகின்ற அதேநேரத்தில் Y பொருளுக்கான கேள்வி குறைந்ததன் காரணமாக அத்தொழிலில் வேலையின்மை ஏற்பட்டுள்ளது.





(இ) X பொருளின் கேள்வி குறைவடைந்த அதேநேரத்தில் Y பொருளின் கேள்வி அதிகரித்துள்ளது.

(ஈ) X பொருளின் கேள்வி குறைவடைந்தமையினால் X பொருளின் உற்பத்தியில் ஈடுபட்ட சில தொழிற்சாலைகள் மூடப்பட்டதைத் தொடர்ந்து அத்தொழிலில் வேலையின்மை ஏற்பட்டுள்ளது.

(உ) பொருளாதாரத்தில் உட்கட்டுமானவசதிகள் உருவாக்கப்பட்டமை.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

X பற்றி மட்டும் தொழில்நுட்பத்தில்

[illegible] உற்பத்தியில் மாற்றமடைதல்




[illegible]




# அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகள் பொருளாதார அமைப்புக்கள் தீர்வுமுறைகள்

**01**

*(அ) சந்தைப் பொருளாதாரத்தின் சிறப்பியல்புகள் யாவை?*

*(ஆ) சந்தைப் பொருளாதாரத்தின் குறைபாடுகள் யாவை?*

*(இ) சந்தைத் தோல்வியைத் தடுப்பதற்கு அரசாங்கம் எவ்வழிகளில் தலையிடலாம் ?*

(அ) - சாதனங்கள் தனியார் உடமை - தனியார் சொத்துரிமை
- தனியார் முயற்சி - சுதந்திரமான தொழில் முயற்சி
4 - இலாப நோக்கம் - சுய நன்மை கருதி செயற்படல்
- அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு விலைப்பொறிமுறை மூலம் தீர்வு காணப்படல்.

(ஆ) - பொதுப்பண்டங்களின் உற்பத்திக்கு வளங்கள் ஒதுக்கப்படாமை.
- உற்பத்தியிலும் நுகர்விலும் காணப்படும் வெளிவாரி விளைவுகளைக் கவனத்தில் எடுக்காமை. மிகை உற்பத்தி அல்லது குறை உற்பத்தி காணப்படல்
- நிறைவில் போட்டிச் சந்தையில் நுகர்வோர் சுரண்டலுக்கு உள்ளாதல். விலை, எல்லைச் செலவிலும் உயர்வாக இருத்தல்.
1 - வருமானப் பங்கீட்டில் பெருமளவு சமமின்மை காணப்படும் நிலைமை
- பேரினப் பொருளாதாரச் சமமின்மை காணப்படும் நிலைமை.
- விளம்பரங்கள்மூலம் நுகர்வோர் விருப்பத் தெரிவு மாற்றமடைதல்
- பொது வளங்களின் பயன்பாடு செயற்திறனற்றுக் காணப்படல்.

(இ) - பொதுப் பண்டங்களின் உற்பத்திக்கான வளங்களின் ஒதுக்கீட்டினை மேற்கொள்ளல்.
5 - எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகளைத் தரக்கூடிய உற்பத்திகளுக்கு வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதித்தலும், நேர்க்கணிய வெளிவாரி விளைவுகளைத் தரக் கூடிய உற்பத்திக ளுக்கு மானியம் வழங்குதலும்

- தனியுரிமையைக் கட்டுப்படுத்தி, சந்தை அமைப்பில் போட்டித்தன்மையை ஊக்குவிப்பதற்கான சட்டவிதிகளைக் கொண்டு வருதல்.
- வருமானம், செல்வம் என்பவற்றை மறுபங்கீடு செய்தல்
- பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டினை ஏற்படுத்துல்.

**02**

***சாதன ஒதுக்கீட்டினை மேற்கொள்ளும் ஒரு முறை என்றவகையில் விலைப் பொறிமுறை பின்வரும் தொழிற்பாடுகளை எவ்வாறு மேற்கொள்கின்றது?***

***(அ) தகவல் வழங்கும் தொழிற்பாடு***

***(ஆ) ஊக்குவிப்புத் தொழிற்பாடு***

***(இ) பங்கீடு செய்யும் தொழிற்பாடு***

(அ) தகவல் வழங்கும் தொழிற்பாடு

சந்தை பொருளாதாரத்தில் உரிய தொடர்பான
தீர்மானங்களை மேற்கொள்வதற்கு தேவையான
தகவலை விலை பொறிமுறை வழங்கின்றது

(ஆ) ஊக்குவிப்புத் தொழிற்பாடு

சந்தைப் பொருளாதாரத்தில் உற்பத்தி
தனியார் துறை உற்பத்தியினை மேற்கொள்ள
தேவையான ஊக்குவிப்பை இலாபத்தின்
ஊடாக விலைபொறிமுறை வழங்கும்.

(இ) பங்கீடு செய்யும் தொழிற்பாடு

வளஒதுக்கீட்டை பொருட்பங்கீட்டை
விலை பொறிமுறை மேற்கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**03**

*யாருக்காக உற்பத்தி செய்தல்*

*(அ) இப் பிரச்சனையால் கருதப்படுவது யாது? இப்பிரச்சினையை எல்லா சமூகங்களும் எதிர் நோக்குவது ஏன் ?*

*(ஆ) சந்தை பொருளாதாரமொன்றில் இப்பிரச்சனை எவ்வாறு தீர்க்கப்படுகின்றது ?*

*(இ) சந்தை பொருளாதாரமொன்றில் இப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் எவ்வாறு தலையிடுகின்றது ?*

(அ) - ஒரு நாட்டின் மொத்த உற்பத்தியை அவ்வுற்பத்தியில் பங்குகொண்ட உற்பத்திக் காரணிகளின் உடமையாளர்களுக்கிடையே என்ன அடிப்படையில் பங்கீடு செய்தல் என்பதே இப்பிரச்சனையாகும்.

- உற்பத்திக்காரணிகளின்உடமையாளர்கள் வெவ்வேறுபட்டளவான வருமானங்களைப் பெறுவதனாலேயே இப்பிரச்சினையை எல்லா சமூகங்களும் எதிர் நோக்குகின்றன.

(ஆ) - விலைப்பொறிமுறையினூடாக சந்தையில் நிலவும் விலையினை செலுத்தும் தகுதியுடையோருக்குப் பொருள் வழங்கப்படும்.

- நிலவும் வருமானப் பங்கீட்டின் அடிப்டையில் உயர்ந்த விலையினை செலுத்தும் தகுதியுடையோருக்குப் பொருள் வழங்கப்படும்.

(இ) - வருமான மறுபங்கீட்டினை மேற்கொள்வதன்மூலம் அரசாங்கம் பொருட் பங்கீட்டினை மாற்றியமைக்கின்றது.

- உயர்ந்த வருமான வகுப்பினருக்கு விருத்திமுறை வரிவிதித்தல்
- தாழ்ந்த வருமான வகுப்பினருக்கு உதவிப்பணம் வழங்குதல்
- செல்வத்தின்மீது உச்சவரம்பு விதித்தல்
- உச்சவிலையினை நிர்ணயித்தல்

**04**

*(அ) திட்டமிடல் பொருளாதாரத்தின் சிறப்பியல்புகள் யாவை?*

*(ஆ) சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நிலவிய மத்திய திட்டமிடல் முறைமை முறிவடைந்தமைக்கு வழிவகுத்த காரணிகள் யாவை?*

*(இ) கலப்புப் பொருளாதாரத்தின் சிறப்பியல்புகள் யாவை?*

(அ) - சாதனங்கள் சமூகத்தின் பொதுவுடமை அல்லது அரசாங்க உடமையாகக் காணப்படல்

- அரச முயற்சி காணப்படுதல்.
- சமூக நல நோக்கம் பேணப்படல்.
- அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மத்திய திட்டமிடல்முறை மூலம் தீர்வு காணப்படல்

(ஆ) - திட்டமிடல் தொடர்பான பிரச்சனைகள். (உ-ம் மொத்த கேள்விக்கு ஏற்ப மொத்த நிரம்பலை தீர்மானிக்க முடியாமை)

- உற்பத்தித் திறனின்மை
- உற்பத்தி செலவினை குறைப்பதற்கான தூண்டுதல் இன்மை புதிய கண்டு பிடிப்புக்களுக்கான ஊக்கமின்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விலை, உற்பத்திமுறை, வெளியீடு என்பன தொடர்பாக முயற்சியாளர்கள் சுயமாக தீர்மானங்களை மேற்கொள்ள முடியாமை.
- ஒரு குறிப்பிட்ட பொருளாதார வளர்ச்சிக்கப்பால் தேக்கநிலை இடம் பெறலும் மக்களின் வாழ்க்கைத்தர உயர்வு தடைப்படலும்

(இ) - விலைப் பொறிமுறையின் குறைபாடுகளை நீக்குவதற்கு அரசின் பரந்த அடிப் படையிலான பங்களிப்பு
- கட்டில்லாச் சந்தைப் பொருளாதாரத்தினதும் திட்டமிட்ட பொருளாதாரத்தின தும் கலப்பாகும்.
- சொத்துக்கள் தனியார் உடைமையும் அரச உடமையும்
- அரச முயற்சியும் தனியார் முயற்சியும் காணப்படுதல்.
- சமூக நல நோக்கமும் இலாப நோக்கமும் காணப்படல்.
- அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மத்திய திட்டமிடல் முறை மூலமும் விலைப் பொறிமுறைமூலமும் தீர்வு காணப்படல்

**05**

***என்ன பொருளை உற்பத்தி செய்தல்***

***(அ) இப் பிரச்சனையால் கருதப்படுவது யாது ? இப்பிரச்சினையை எல்லா சமூகங்களும் எதிர் நோக்குவது ஏன் ?***

***(ஆ) சந்தை பொருளாதாரமொன்றில் இப்பிரச்சனை எவ்வாறு தீர்க்கப்படுகின்றது ?***

***(இ) மத்திய திட்டமிடல் பொருளாதாரமொன்றில் இப் பிரச்சனை எவ்வாறு தீர்க்கப் படுகின்றது ?***

(அ) - அருமையானதும் மாற்றுப்பயன்பாடுகளை உடையதுமான வளங்களை ஒரு குறித்த நேரத்தில் எந்தஉற்பத்திக்கு பயன்படுத்தல் என தெரிவு செய்தலே எதனை உற்பத்தி செய்தல் என்ற பிரச்சனையாகும்.
- வளங்கள் அருமைத்தன்மையுடையனவாக இருப்பதுமட்டுமன்றி மாற்றுபயோ கங்களையுடையனவாகவும் இருப்பதனாலும் இப்பிரச்சினையை எல்லாச் சமூ கங்களும் எதிர்நோக்குகின்றது.

(ஆ) - இலாபம் நோக்கம் கொண்ட தனியார் துறை உற்பத்தியாளர் சந்தையில் நிலவும் விலைகளின் அடிப்படையில் சாதன ஒதுக்கீட்டை மேறகொள்கின்றனர்
- கேள்வி நிரம்பல்களினால் நிர்ணயிக்கப்படுகின்றன சந்தைவிலைகளின் அடிப்படையில் உயர்ந்த சார்பு இலாபத்தைத் தரக்கூடிய பொருட்கள் தெரிந்தெடுக்கப்பட்டு உற்பத்திசெய்யப்படும்

(இ) - சமூகத்தின் தேவைகளின் அடிப்படையில் உற்பத்திகள் தெரிந்தெடுக்கப்படும். சமூகத்தின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு எப் பொருள் இன்றி யமையாது தேவைப்படுகின்றதோ அப்பொருள் தெரிந்தெடுக்கப்பட்டு உற்பத்தி செய்யப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**06**

(அ) 'சந்தைப் பொருளாதாரமொன்று கட்புலனுக்கு எட்டாத கரத்தினால் ஒழுங்குபடுத்தப்படுகின்றது'. விளக்குக.

(ஆ) 'சந்தைப் பொருளாதாரத்தில் நுகர்வோர் இறைமை நிலவுகின்றது'. விளக்குக.

(இ) ஒரு திட்டமிடல் பொருளாதாரத்தின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் கூறுக

(அ) - சந்தைப் பொருளாதாரமொன்று விலைப்பொறிமுறையினால் இயக்கப்படுகின்றது. இவ் விலைப்பொறிமுறையே கட்புலனுக்கு எட்டாத கரம் எனப்படுகின்றது.

- சந்தைச் சக்திகளான கேள்வி,நிரம்பல்களினால் நிர்ணயிக்கப்படும் விலையின் செயற்பாடே கட்புலனுக்கு எட்டாத கரம் எனப்படும்.
- சந்தைப் பொருளாதாரத்தில் கேள்வி,நிரம்பல்களினால் நிர்ணயிக்கப்படும் விலைகளின் அடிப்படையில் உற்பத்தி, பங்கீடு என்பன தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.
- என்ன பொருளை, எந்தளவு, எப்படி, யாருக்காக உற்பத்தி செய்தல் என்ற அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகள் கேள்வி, நிரம்பல்களினால் நிர்ணயிக்கப்படும் விலைகளின் அடிப்படையில் இயங்கும் விலைப்பொறி முறையின் கீழ் தீர்க்கப்படுகின்றன.

(ஆ) - சந்தைப் பொருளாதாரம் சந்தைச் சக்திகளான கேள்வி,நிரம்பல்களினால் நிர்ணயிக்கப்படும் விலைகளை - விலைப்பொறிமுறையை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றது.

- எனவே இங்கு நுகர்வோரின் கேள்வி மட்டுமன்றி உற்பத்தியாளரின் நிரம்பலும் சேர்ந்தே விலைகளை நிர்ணயிப்பதனால் நுகர்வோருக்கு மட்டுமன்றி உற்பத்தியாளருக்கும் இறைமையுண்டு.
- தனியுரிமையின்போது விலைநிர்ணயித்தலில் நுகர்வோரிலும் பார்க்க உற்பத்தியாளரே கூடுதலான செல்வாக்குச் செலுத்துவதனால் இந்நிலையில் உற்பத்தியாளரின் இறைமை கூடுதலாக இருக்கும்.
- விளம்பரங்கள் போன்ற விற்பனை ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மூலம் நுகர்வோரின் இறைமையில் உற்பத்தியாளர் செல்வாக்குச் செலுத்த முடியும்.

(இ) **அனுகூலங்கள்**

- பொதுப் பண்டங்கள் போதுமானளவில் வழங்கத்தக்கவகையில் வளக் கிடைப்பனவை உறுதிப்படுத்துதல்.
- வளங்கள் திட்டமிட்ட அடிப்படையில் பயன்படுத்தப்படுவதனால் அவை சிறந்த முறையில், பயன்பாட்டைத் தரும்வகையில் நகர்த்தப்படக்கூடியதாக உள்ளது.
- எதனை, எவ்வாறு உற்பத்தி செய்தல் என்பவற்றைத் திட்டமிடும்போது வெளிவாரிச் செலவுகள், வெளிவாரி நன்மைகள் என்பனவற்றில் கவனம் செலுத்தப்படும்.
- தனியார் நன்மையைவிட பொது நன்மை உச்சப்படுத்தப்படும்.
- தனியார் முயற்சிகளினால் ஏற்படக்கூடிய சுரண்டல்கள் தடுக்கப்படும்.
- வருமானப் பங்கீட்டில் சமமின்மை குறைக்கப்படும்.
- பொருளாதார நடவடிக்கைகள் நீண்டகால நோக்கில் அணுகப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிகூலங்கள்

- கேள்வியை மதிப்பிடுதல் சாத்தியமற்றது.
- அரச நிர்வாக அமைப்பின் விளைவாகத் தீர்மானங்கள் எடுத்தலின் திறனின்மை - ஊழல் நிலவுதல்.
- துறைகளுக்கிடையில் தொடர்புகளை ஏற்படுத்துதல் கடினம்.
- அரச உடைமையானது தனியார்துறைக்கான தூண்டலைக் குறைத்து விடும்.
- நடவடிக்கைகளுக்கான சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுதல்.
- குறைந்த நுகர்வோர் இறைமை காணப்படுதல்.

# உற்பத்தி வளங்கள்

**01**

*(அ) உற்பத்திக்காரணி என்றவகையில் நிலம், உழைப்பு, மூலதனம் என்பவற்றை வேறுபடுத்துக ?*

*(ஆ) ஒரு பொருளாதாரத்தின் ஊழியத்தின் மொத்த நிரம்பலை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை ?*

*(இ) ஊழியத்தின் உற்பத்தித்திறன் என்பதனால் கருதப்படுவது யாது ? இதனை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை??*

(அ) **நிலம் :** உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் இயற்கைவளங்கள் அனைத்தும் உற்பத்திக்காரணி என்றவகையில் நிலம் எனப்படும். எனவே இது ஒரு இயற்கைச் சாதனம்

**உழைப்பு :** பொருட்கள்,சேவைகளின் உற்பத்திக்கு மனிதனால் வழங்கப் படும் உடல்ரீதியானதும் உளரீதியானதுமான காரணிச்சேவை. எனவே இது ஒரு மனித சாதனம்

**மூலதனம் :** பொருட்கள்,சேவைகளின் உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக மனிதனால் உருவாக்கப்படும் இயந்திரங்கள், கருவிகள், கட்டிடங்கள் போன்றவை மூலதனம் எனப்படும். இது மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு சாதனம்.

(ஆ) - சனத்தொகையின் பருமன்
- சனத்தொகையின் பால் அமைப்பு - ஆண்கள்,பெண்கள்
- சனத்தொகையின் வயதமைப்பு - வேலை செய்யும் வயதிலான சனத்தொகையின் அளவு
- தொழிற்படையின் அளவு - வேலை செய்யக்கூடிய விருப்பமும் ஆற்றலுமுடையோரின் தொகை
- ஒவ்வொரு தொழிலாளியும் வேலை செய்யத்தயாராக இருக்கும் ஊழிய மணித்தியாலங்களின் அளவு
- நடைமுறையிலுள்ள கூலி மட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) - ஊழியத்தின் சராசரி உற்பத்தியே ஊழியத்தின் உற்பத்தித்திறன் ஆகும்.
- மொத்த உற்பத்தியை ஊழிய மணித்தியாலயங்களினால் பிரிப்பதன்மூலம் இது கணிப்பிடப்படுகின்றன.

$$\text{ஊழியத்தின் உற்பத்திறன்} = \frac{\text{மொத்த உற்பத்தி}}{\text{ஊழியமணித்தியாலங்கள்}}$$

நிர்ணயிக்கும் காரணிகள் : கல்வி, தொழில்நுட்பம், முகாமைத்துவம்

**02**

*(அ) முதல், முதலீடு, சேமிப்பு என்பவற்றிற்கிடையிலான தொடர்புகளை விளக்குக.*
*(ஆ) மூலதனவாக்கத்தின் முக்கியத்துவம் யாது ?*
*(இ) ஒரு நாட்டின் மூலதனவாக்கத்தின் முக்கியமான மூலங்கள் யாவை*

(அ) மூலதனம்: பொருட்கள் சேவைகளின் உற்பத்திற்கு பயன்படுத்துவதற்கான ஏற்கனவே இருக்கின்ற மூலதனச் சொத்துக்கள் மூலதனம் எனப்படும். எனவே இது ஒரு இருப்பு (stock) ஆகும். இது தேய்வுக்கு உட்படும்.

**முதலீடு** : மூலதன இருப்பில் ஏற்படும் தேய்வினை ஈடுசெய்வதற்காகவும் மூலதன இருப்பினை மேலும் அதிகரிப்பதற்காகவும் ஒவ்வோராண்டும் புதிதாக உருவாக்கப்படும் மூலதனச் சொந்துக்களே முதலீடாகும்.

- முதலீடு ஒரு பாய்ச்சல் (stock) ஆகும்
- $I_t = DK = K_t - K_{t-1}$

**சேமிப்பு** : வருமானத்தின் இன்றைய நுகர்விற்கு செலவிடப்படாத பகுதி சேமிப்பாகும்.

- $S = Y - C$
- முதலீட்டுக்கான ஒரு முக்கிய மூலம் சேமிப்பாகும்.
- சேமிப்பை அதிகரிப்பதன் மூலம் முதலீட்டை அதிகரிக்க முடியும். இதன் மூலம் மூலதன இருப்பு அதிகரிக்கும்.

(ஆ) - மூலதனஇருப்பு அதிகரிக்கும்.
- உற்பத்தி இயலளவு அதிகரிக்கும்.
- உற்பத்தி அதிகரிக்கும்.
- பொருளாதார வளர்ச்சி ஏற்படும்.
- வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கும்.

(இ) உள்நாட்டுமூலம்

உள்நாட்டுச் சேமிப்பு : (i) தனியார் சேமிப்பு (ii) அரச சேமிப்பு

தனியார் சேமிப்பு : (i) வீட்டுத்துறைச் சேமிப்பு
(ii) வியாபாரச் சேமிப்பு
உ-ம் பகிரப்படாத இலாபங்கள்,பெறுமானத்தேய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச சேமிப்பு : அரசாங்க வரவுசெலவுத்திட்டத்தின் நடைமுறைக் கணக்கின் மிகை.

அரசின் நடைமுறைச் செலவிலும்பார்க்க அரச வருமானம் பெரிதாகக் காணப்படும் நிலை.

வெளிநாட்டுமூலம் : கடன்கள், மூலதன நன்கொடைகள் வெளிநாட்டு முதலீடுகள் இவை சர்வதேச நாடுகளிடமிருந்தும் சர்வதேச நிறுவனங்களிடமிருந்தும் பெறப்படுகின்றன.

**03**

***(அ) நிலையான முதல், இருப்புக்களின் மாற்றம் என்பவற்றை வேறுபடுத்துக. இருப்புக்களின் மாற்றம் ஏன் மூலதனவாக்கத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றது***

***(ஆ) மனித மூலதனம் என்பதனால் கருதப்படுவது யாது? இதனை மேம்படுத்துவதற்கு மேற் கொள்ளத்தக்க நடவடிக்கைகள் யாவை?***

***(இ) ஒரு பொருளாதாரத்தில் முயற்சியாளரின் கடமைப்பங்குகள் யாவை??***

(அ) - நிலையான முதல் : உற்பத்திக்கு மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படக் கூடிய தாகவுள்ள மூலதனச் சொத்துக்கள் நிலையான முதல் எனப்படும். தொடர்ந்து உற்பத்திக்குப் பயன்படுத்தப்படக்கூடியதாகவுள்ளபொறிகள், கருவிகள், கட்டி டங்கள் மூலதனச் சொத்துக்களை இது குறிக்கின்றது. இது தேய்விற்கு உட்படும்.

(ஆ) - இருப்புக்களின் மாற்றம் : மூலப்பொருள், இடைத்தரப்பொருள், முடிவுப்பொருள் என்பவற்றை உள்ளடக்கி குறிப்பிட்ட ஆண்டின் இறுதி இருப்பிற்கும் அதற்கு முற்பட்ட ஆண்டின் இறுதி இருப்பிற்கிடையிலான தொகை.

- நிகழ்கால வருமானத்திலிருந்து நிகழ்கால நுகர்வுக்குச் செலவிடப்படாத பகுதி முதலீடாகும்.
- Y - C = I எனவே முதலீடு ஒரு எச்சமாகும்.
- குறிப்பிட்ட ஆண்டின் உற்பத்தியில் அந்த ஆண்டு நுகரப்படாமல் எஞ்சியிருப் பதே இருப்பாகும்.

(இ) - மனிதர்களிடத்தில் காணப்படுகின்ற சில விசேட உற்பத்தித்திறமைகளே மனித மூலதனம் எனப்படும்.

- மனிதர்களால் உருவாக்கப்பட்டு அவர்களுக்கே சொந்தமாகவுள்ள வைத்திய அறிவு, தொழில்நுட்ப அறிவு போன்ற விசேட உற்பத்தித் திறமைகளே மனித மூலதனமாகும்.
- கல்வி, சுகாதார,மருத்துவவசதிகள்,போசாக்கு போன்றவற்றில் ஏற்படுகின்ற சமூகநல முன்னேற்றங்கள். இச் சமூகநல சேவைகளில் அரசாங்கம் மேற் கொள்ளும் செலவுகள்.
- உற்பத்தித் தீர்மானங்களை மேற்கொள்ளல். என்ன பொருளை,எந்தளவு, எப்படி உற்பத்தி செய்தல் என்பது தொடர்பான தீர்மானங்களை மேற் கொள்ளல்.

(ஈ) - உற்பத்தியை மேற்கொள்ளல். நிலம், உழைப்பு, மூலதனம் ஆகிய உற்பத்திக் காரணிகளை ஒழுங்குபடுத்தி இணைத்து உற்பத்தினை மேற்கொள்ளல்

- புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளல்.
- நிச்சயமற்ற எதிர்காலம் தொடர்பான ஆபத்துக்களை எதிர்நோக்கி இலாப த்தை உழைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ) ........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

✦ ✦ ✦

1. ஒரு பொருளாதாரம் தனக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள அனைத்து வளங்களையும் முழுமையாக உற்பத்தியில் ஈடுபடுத்துவது சிறந்த நடவடிக்கையா? விளக்குக.

2. ஊழியத்தின் உற்பத்தித்திறனில் ஏற்படுகின்ற மாற்றங்கள் உற்பத்தி இயல்தகவு வளையியை எவ்வாறு பாதிக்கும்?

3. (i) வளப்பயன்பாட்டின் விளைத்திறன், வளப்பயன்பாட்டின் விளைத்திறனின்மை என்பவற்றை வேறுபடுத்துக. இவற்றை உற்பத்தி இயல்தகவு வளையியில் எவ்வாறு காட்டுவீர்?

   (ii) உற்பத்தியில் விளைத்திறன் , பங்கீட்டில் விளைத்திறன் என்பவற்றை வேறுபடுத்துக. இவற்றை உற்பத்தி இயல்தகவு வளையியில் எவ்வாறு காட்டுவீர்?

4. (i) 'பொருளாதார செயற்திறன்' விளக்குக.

   (ii) விலைப் பொறிமுறை அருமையாகவுள்ள சாதனங்களை செயற்திறன்மிக்க விதத்தில் ஒதுக்கீடு செய்கின்றதா?

5. திட்டமிடற் பொருளாதாரத்திலிருந்து விலகி, சந்தைப் பொருளாதாரத்தை நோக்கிய ஒரு மாற்றம் இன்று உலகளாவிய அளவில் நடைபெறுகின்றது.' விளக்குக.

6. 'நுகர்வோருக்கு என்ன தேவை என்று நாம் அவர்களிடம் கேட்பதில்லை. அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. அவர்களுக்கு என்ன தேவை - எதை விரும்பவார்கள் என்பதை நாங்கள் தான் தீர்மானிக்கின்றோம்' அகியோ மொரிற்றா - சொனி நிறுவனத்தின்ஸ்தாபகர் நுகர்வோரா அல்லது உற்பத்தியாளரா சந்தையில் அதிகம் ஆதிக்கம் செலுத்துகின்றனர்? விளக்குக.

7. வள ஒதுக்கீட்டின் வெளிவாரி விளைவுகளை விளக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வரைபடங்கள் – கணக்குகள்
2. பொருளியல் அறிமுகம்
3. சந்தைப் பொருளாதாரம்
4. பேரினப் பொருளாதாரம்
5. பொதுப் பொருளாதாரம்
6. பணம், வங்கி, விலைமட்டம்
7. சர்வதேச பொருளியல்
8. பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி
9. பொருளாதாரக் கொள்கைகள்
10. இலங்கைப் பொருளாதாரத்தின் அண்மைக்காலப் பண்புகளும் போக்குகளும்

முனையில் சந்தைப் பொருளாதாரம்
இதயத்தில் சமவுடமைப் பொருளாதாரம்


✦ **தமிழ் வளாகம்** (தமிழ்ச் சங்கக் கட்டிடம்)
**இல 7, 57வது ஒழுங்கை, வெள்ளவத்தை.**
**☎ 2503659**

✦ **இராஜேஸ்வரி கல்வி நிலையம்,**
**கொட்டாஞ்சேனை.**
**☎ 2434221**

✦ **பொருளியற் கல்லூரி,**
**நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**


Book design & Published by : Jaffna School of Economics

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org